12 மார்ச் 2014

# புரவலர் டான்ஸ்ரீ டத்தோ கே. ஆர். சோமசுந்தரம் அவர்களின் செய்தி

இவ்வட்டாரத்தில் வாழும் இந்துக்களில் பெரும்பாலோர் இராமர் பக்தர்கள். அவர்கள் ஸ்ரீ இராமனை வழிபடவும் அருளைப்பெறவும் ஸ்ரீ இராமர் ஆலயம் எழுந்தருளப் பெற்றுள்ளது.

ஆலாய வளாகத்தில் துணைக்கோயில்களை எழுப்பி வழிபட்டு வருவதோடு வரும் 2015-ஆம் ஆண்டு மூன்றாவது கும்பாபிஷேகமும் நடைபெற இருக்கின்றது.

ஸ்ரீ இராமர் கோயில் வளாகத்தில் மற்றுமொரு மாபெரும் திருப்பணி நடைபெற திட்டமிடப்பட்டுள்ளது. 'இராமாயண சித்திரக்கூடம்' இராம காவியத்தில் வரும் தத்துவங்களை 98 கருங்கல் பலகைகளில் காட்சிகளாக செதுக்கி ஆலய வளாகத்தில் பிரதான கோயில் மண்டபத்தைச் சுற்றி அழியாதொரு சித்திரக்கூடமாக அமைக்கும் பணியாகும்.

இந்நாட்டிலேயே பெரிய ஆலயமாக அமைந்திருக்கும் ஸ்ரீ இராமர் ஆலயம் தென்கிழக்காசியாவில் பன்னெடுங்காலமாக பரவியிருக்கும் இராமாயண இதிகாசங்களுக்கு ஏற்றதாகவும் வருங்காலத்தில் இராமர் பக்தர்கள் வழிபாட்டுக்கு வந்து செல்லும் ஸ்தலமாகவும், சுற்றுலா பயணிகள் பார்த்து ரசிக்கும் கலைக்கூடமாகவும் இருக்கும் என்று எதிர்பார்க்கலாம். தேசிய நில நிதி கூட்டுறவு சங்கம் ஆலயத்தை தொடர்ந்து பராமரித்து வரும்.